INDIA PARTNER Dabur GROUP



# அவிவா **இன்கம் சுரக்ஷா**

AVIVA
Life Insurance

**அவிவா - இன்கம் சுரக்ஷா - ஒரு தனி நபர், இணைக்கப்படாத, பங்கு பெறாத, சேமிப்புடன் கூடிய ஆயுள் காப்பீட்டுத் திட்டம்**

உங்கள் அன்பிற்கு உரியவர்களுக்கு ஒரு வசதியான வாழ்க்கையை இன்றும் மற்றும் நாளையும் வழங்குவதற்கான உங்கள் முயற்சி மற்றும் கடின உழைப்பை அவிவாவில் நாங்கள் அங்கீகரிக்கிறோம். வழங்குகிறோம், அவிவா இன்கம் சுரக்ஷா, ஒரு ஆயுள் காப்பீடு மற்றும் **சேமிப்பு சார்ந்த** திட்டம் அது தொடர்ச்சியாக, ஒரு உத்திரவாத மாத வழங்குதலின் மூலம் (பே அவுட்) உங்களுக்கு நிதி உதவியை வழங்குகிறது. ஒரு வேளை உங்களுக்கு அகால மரணம் ஏற்பட்டால், இந்த மாத வழங்குதல் (பே அவுட்) உங்கள் குடும்பத்திற்கு வழங்கப்படும்.

**அவிவா இன்கம் சுரக்ஷா - முக்கிய நன்மைகள்**

- உத்திரவாத* மாத வருமானம் 10 அல்லது 12 வருடங்களுக்கு
- வாழ்க்கை நிலையின் தேவைக்கு ஏற்ப வருமானத்தை சீரமைத்துக் கொள்ள வசதி
- ஆயுள் காப்பீட்டாளரின் மரணத்தின் பொழுது குடும்பத்திற்கு உத்திரவாத வருமானம்
- வரி நன்மைகள் வரிச்சட்டங்களின்படி பொருந்தும்

***உத்திரவாத மாத வருமானமானது, மரணம் அல்லது முதிர்வு, எது முதலில் நிகழ்கிறதோ அந்த நாள் வரை அனைத்து உரிய பிரீமியங்களும் செலுத்தி இருப்பதற்கு உட்பட்டு வழங்கப்படுகிறது.***

**அவிவா இன்கம் சுரக்ஷா - தகுதி**

<table>
<tr><th>வழியலகு</th><th>அளவுகோல்கள்</th></tr>
<tr><td>நுழைவில் வயது</td><td>18 முதல் 48 வயது வரை (கடைசி பிறந்த நாளின்படி)</td></tr>
<tr><td>முதிர்வில் வயது</td><td>28 முதல் 65 வருடங்கள் வரை (கடைசி பிறந்த நாளின்படி)</td></tr>
<tr><td>பிரீமியம் செலுத்தும் காலம்</td><td>10 அல்லது 12 வருடங்கள்</td></tr>
<tr><td>ஒத்திவைப்புக் காலம்</td><td>0 அல்லது 3 அல்லது 5 வருடங்கள்</td></tr>
<tr><td>பாலிசி காலம்</td><td>பாலிசி காலமானது பிரீமியம் செலுத்தும் காலம் மற்றும் ஒத்திவைப்புக் காலம் ஆகியவற்றிற்கு நிரானது
<table>
<tr><th>பிரீமியம் செலுத்தும் காலம் (வருடங்களில்)</th><th>ஒத்திவைப்புக் காலம் (வருடங்களில்)</th><th>பாலிசி காலம் (வருடங்களில்)</th></tr>
<tr><th>(1)</th><th>(2)</th><th>(3)= (1) + (2)</th></tr>
<tr><td rowspan="3">10</td><td>0</td><td>10</td></tr>
<tr><td>3</td><td>13</td></tr>
<tr><td>5</td><td>15</td></tr>
<tr><td rowspan="3">12</td><td>0</td><td>12</td></tr>
<tr><td>3</td><td>15</td></tr>
<tr><td>5</td><td>17</td></tr>
</table></td></tr>
<tr><td>பேஅவுட் (வழங்கும்) காலம்</td><td>
<table>
<tr><th>பிரீமியம் செலுத்தும் காலம்</th><th>பேஅவுட் (வழங்கும்) காலம்</th></tr>
<tr><td>10 வருடங்கள்</td><td>10 வருடங்கள்</td></tr>
<tr><td>12 வருடங்கள்</td><td>12 வருடங்கள்</td></tr>
</table></td></tr>
<tr><td>பிரீமியம் (குறைந்தபட்சம்)</td><td>நுழைவில் வயது 18 முதல் 40 வருடங்கள் வரை:<br>ஆண்டிற்கு ₹36,000 அல்லது மாதத்திற்கு ₹3,000<br>நுழைவில் வயது 41 முதல் 48 வருடங்கள் வரை:<br>ஆண்டிற்கு ₹60,000 அல்லது மாதத்திற்கு ₹5,000<br>வரிகள் ஏதாவது இருந்தால் அவை தனியாக விதிக்கப்படும்</td></tr>
<tr><td>ரொக்க உத்திரவாதம்</td><td>குறைந்தபட்ச ரொக்க உத்திரவாதம்
<table>
<tr><th>நுழைவில் வயது 18 - 40 வயது</th><th>நுழைவில் வயது 41 - 48 வயது</th></tr>
<tr><td>₹6,84,000</td><td>₹1,140,000</td></tr>
</table>
அதிகபட்ச ரொக்க உத்திரவாதம்<br>வரையறை இல்லை. அதிகபட்ச ரொக்க உத்திரவாதமானது குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) அடிப்படையில் இருக்கும்</td></tr>
<tr><td>பிரீமியம் செலுத்தும் வீதம்</td><td>வருட மற்றும் மாத வீதம் மட்டுமே.<br>மாத வீதத்திற்கு, ECS/டைரெக்ட் டெபிட் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

**தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள்:**

1. நடப்பில் இருக்கும் வரிச் சட்டங்களின்படி, பிரீமியத் தொகைக்கு மேலாக பொருந்தத்தக்க வரிகள் மற்றும் செஸ்கள் விதிக்கப்படும். வரிச் சட்டங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.
2. ஒத்திதவப்புக் காலம் என்பது பிரீமியம் செலுத்தும் காலம் மற்றும் பாலிசி காலத்தின் இடையே உள்ள காலமாகும்.

**அவிவா இன்கம் சுரக்ஷா - திட்ட நன்மைகள்**

**முதிர்வு நன்மை**

பாலிசி காலம் இறுதி வரையில் ஆயுள் காப்பீட்டாளர் உயிர் வாழும் பொழுது மற்றும் அனைத்து உரிய பிரீமியங்களும் செலுத்தி இருப்பதற்கு உட்பட்டு; முதிர்வு ரொக்க உத்திரவாதமானது, பே அவுட் காலத்தில், ரெகுலர் மாத வருமான வடிவத்தில் வழங்கப்படும். முதல் தவணையானது முதிர்வு நாளில் வழங்கப்படுகிறது மற்றும் மீதம் உள்ள தவணைகள், பின்வரும் ஒவ்வொரு மாத பாலிசி வருடாந்திரத்திலும் பே அவுட் காலத்தின் இறுதி வரை வழங்கப்படுகிறது.

ரெகுலர் மாத வருமானம் = மாத பிரீமியம்$ X முதிர்வு நன்மை மல்டிப்ளையர் (பெருக்கி)

முதிர்வு நன்மை மல்டிப்ளையரானது கீழ்க் கண்ட அட்டவணையில் அளித்துள்ள படி பிரீமியம் செலுத்தும் வீதத்தின் அடிப்படையில் அமையும்:

| பிரீமியம் செலுத்தும் காலம் வருடங்களில் | 'மாத' பிரீமிய வீதத்திற்காக | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 'மாத' பிரீமிய வீதத்திற்காக | | | 'வருட' பிரீமிய வீதத்திற்காக | | |
| | ஒத்திவைப்புக் காலம் (வருடங்களில்) | | | ஒத்திவைப்புக் காலம் (வருடங்களில்) | | |
| | 0 | 3 | 5 | 0 | 3 | 5 |
| 10 | 1.45 | 1.70 | 1.90 | 1.55 | 1.80 | 2.00 |
| 12 | 1.70 | 1.90 | 2.15 | 1.80 | 2.00 | 2.25 |

$பிரீமியமானது வரிகள் மற்றும் ஏதாவது கூடுதல் பிரீமியம் இருந்தால் அவை நீங்கலாக

'வருட' பிரீமிய வீதத்திற்காக, மாத பிரீமியம் = வருடாந்திரப் பிரீமியம் ÷ 12

முதிர்வு ரொக்க உத்திரவாதத்திற்குக் கூடுதலாக ஒரு வயது சார்ந்த உத்திரவாத இறுதி (டெர்மினல்) நன்மையும் ரெகுலர் மாத வருமானத்தின் கடைசித் தவணையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது

ஒரு வேளை பே அவுட் காலத்தில், ஆயுள் காப்பீட்டாளர் மரணமுற நேர்ந்தால், மீதமுள்ள ரெகுலர் மாத வருமானத்தின் ரெகுலர் தவணைகளை நாமினி தொடர்ந்து பெறுவார் மற்றும் உத்திரவாத இறுதி (டெர்மினல்) நன்மையும் ரெகுலர் மாத வருமானத்தின் கடைசித் தவணையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது

**'மாத' பிரீமியம் வழங்கும் வீதத்திற்கான உதாரணம்:**

35 வயதுடைய ஒரு ஆண், அவிவா இன்கம் சுரக்ஷா திட்டத்தை வாங்குகிறார். அவர் மாத பிரீமியமாக ₹5,000 த்தை தேர்ந்தெடுக்கிறார். அவர் பிரீமியம் செலுத்தும் காலமான 10 வருடங்கள் மற்றும் ஒத்திவைப்புக் காலமான 3 வருடங்களையும் தேர்ந்தெடுக்கிறார். அவரது பாலிசி காலமானது 13 வருடங்கள் (கககூ 10 வருடங்களும் மற்றும் ஓத்திவைப்புக் காலம் 3 வருடங்களும் ஆகும்).

அவர் முதிர்வு வரை உயிர் வாழும் பொழுது மற்றும் அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருந்தால், முதல் தவணையான ரெகுலர் மாத வருமானமான (RMI) ₹8,500 (=5000*1.7) முதிர்வு நாளிலும் மற்றும் மீதம் உள்ள 119 RMI தவணைகள் பின்னர் வரும் ஒவ்வொரு மாத பாலிசி வருடாந்திரத்திலும் பே அவுட் காலமான 10 வருடங்களுக்கு வழங்கப்படுகிறது. முதிர்வு நன்மையின் கடைசி தவணையை உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மையுடன் வழங்கப்பட்ட உடன் பாலிசி முடிவு பெறும்.

**'வருட' பிரீமியம் வழங்கும் வீதத்திற்கான உதாரணம்:**

35 வயதுடைய ஒரு ஆண், அவிவா இன்கம் சுரக்ஷா திட்டத்தை வாங்குகிறார். அவர் வருடாந்திரப் பிரீமியமாக ₹60000 த்தை தேர்ந்தெடுக்கிறார். அவர் பிரீமியம் செலுத்தும் காலமான 10 வருடங்கள் மற்றும் ஒத்திவைப்புக் காலமான 3 வருடங்களையும் தேர்ந்தெடுக்கிறார். அவரது பாலிசி காலமானது 13 வருடங்கள் (PPT 10 வருடங்களும் மற்றும் ஒத்திவைப்புக் காலம் 3 வருடங்களும் ஆகும்).

அவர் முதிர்வு வரை உயிர் வாழும் பொழுது மற்றும் அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருந்தால், முதல் தவணையான ரெகுலர் மாத வருமானமான ₹9,000 த்தை (=5000*1.8) முதிர்வு நாளிலும் மற்றும் மீதம் உள்ள 119 RMI தவணைகள் பின்னர் வரும் ஒவ்வொரு மாத பாலிசி வருடாந்திரத்திலும் பேஅவுட் காலமான 10 வருடங்களுக்கு வழங்கப்படுகிறது. முதிர்வு நன்மையின் கடைசி தவணையை உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மையுடன் வழங்கப்பட்ட உடன் பாலிசி முடிவு பெறும்.

**மரண அனுகூலம்**

பாலிசி காலத்தின பொழுது ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளருக்கு மரணம் ஏற்பட்டால், அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருப்பதற்கு உட்பட்டு, மரண ரொக்க உத்திரவாதமானது பே அவுட் காலத்தில் ரெகுலர் மாத வருமானமாக வழங்கப்படுகிறது. முதல் தவணை மரணத்தின் பொழுது வழங்கப்படுகிறது மற்றும் மீதம் உள்ள தவணைகள் பின்னர் வரும் ஆயுள் காப்பீட்டாளரின் மாத மரண வருடாந்திரத்தில் வழங்கப்படும்.

ரெகுலர் மாத வருமானம் = மாத பிரீமியம்$ X மரண அனுகூல மல்டிப்ளையர் (பெருக்கி)

மரண அனுகூல மல்டிப்ளையரானது கீழே அளித்துள்ள அட்டவணையின்படி பிரீமியம் செலுத்தும் வீதத்தின் அடிப்படையில் அமையும்.

| பிரீமியம் செலுத்தும் காலம் வருடங்களில் | மரண அனுகூலம் மல்டிப்ளையர் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 'மாத' பிரீமிய வீதத்திற்காக | | | 'வருட' பிரீமிய வீதத்திற்காக | | |
| | ஒத்திவைப்புக் காலம் (வருடங்களில்) | | | ஒத்திவைப்புக் காலம் (வருடங்களில்) | | |
| | 0 | 3 | 5 | 0 | 3 | 5 |
| 10 | 1.90 | 2.10 | 2.30 | 2.20 | 2.40 | 2.60 |
| 12 | 2.10 | 2.30 | 2.50 | 2.40 | 2.60 | 2.80 |

$பிரீமியமானது வரிகள் மற்றும் ஏதாவது கூடுதல் பிரீமியம் இருந்தால் அவை நீங்கலாக

'வருட' பிரீமிய வீதத்திற்காக, மாத பிரீமியம் = வருடாந்திரப் பிரீமியம் ÷12

*மரண ரொக்க உத்திரவாதம் பின் வருவனவற்றில் அதிகமானதாகும்:

a) வருடாந்திரப் பிரீமியத்தின் 10 மடங்கு அல்லது
b) மரண நாள் வரை செலுத்திய மொத்த பிரீமியத்தின் 105% ஆகும் அல்லது
c) முதிர்வு ரொக்க உத்திரவாதம் அல்லது
d) மரணத்தின் பொழுது வழங்கப்படும் ஒரு முழுமையான உத்திரவாதத் தொகை

''வருட பிரீமியம்'' என்பது பாலிசிதாரர் தேர்வு செய்தபடி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையாகும், இதில் வரிகள், ரைடர் பிரீமியங்கள், எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள் மற்றும் மோடல் பிரீமியங்களின் லோடிங்குகள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக.

செலுத்திய மொத்த பிரீமியங்கள் என்றால், பெறப்பட்ட அனைத்து மொத்த பிரீமியங்கள், இவற்றில், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக

மரண ரொக்க உத்திரவாதத்திற்குக் கூடுதலாக ஒரு வயது சார்ந்த டெர்மினல் (இறுதி) நன்மையும், ரெகுலர் மாத வருமானத்தின் கடைசி தவணையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

**உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை**

| ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளரின் நுழைவு வயது | உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை | |
|---|---|---|
| | ஒரு வேளை வருடாந்திரப் பிரீமியம் <=₹50,000 | ஒரு வேளை வருடாந்திரப் பிரீமியம் >₹50,000 |
| 18 வருடங்கள் 30 வருடங்கள் | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 50% | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 70% |
| 31 வருடங்கள் 35 வருடங்கள் | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 40% | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 65% |
| 36 வருடங்கள் 40 வருடங்கள் | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 35% | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 50% |
| 41 வருடங்கள் 45 வருடங்கள் | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 10% | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 20% |
| 46 வருடங்கள் 48 வருடங்கள் | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 2% | ஒரு வருடாந்திரப் பிரீமியத்தின்* 4% |

''வருட பிரீமியம்'' என்பது பாலிசிதாரர் தேர்வு செய்தபடி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையாகும், இதில் வரிகள், ரைடர் பிரீமியங்கள், எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள் மற்றும் மோடல் பிரீமியங்களின் லோடிங்குகள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக.

**'மாத' பிரீமியம் செலுத்தும் வீதத்தின் மரண அனுகூலத்திற்கான உதாரணம்.**

35 வயதுடைய ஒரு ஆண், அவிவா இன்கம் சுரக்ஷா திட்டத்தை வாங்கியுள்ளார். அவர் மாத பிரீமியமாக ₹5,000 த்தை தேர்வு செய்துள்ளார்.

**மாதிரி- 1:** அவர் பிரீமியம் செலுத்தும் காலமாக 10 வருடங்களையும் ஒத்தி வைப்புக் காலமாக 3 வருடங்களையும் தேர்வு செய்துள்ளார். அவரது பாலிசி காலம் 13 வருடங்கள் ஆகும் (PPT 10 வருடங்கள் மற்றும் ஒத்தி வைப்புக் காலம் 3 வருடங்கள்). ஒரு வேளை அவர் 6வது பாலிசி வருடத்தில் மரணமுற நேர்ந்தால் மற்றும் மரண நாள் வரை அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருந்தால், அவரது உரிமை கோருபவர் (கிளெய்மென்ட்) உடனடியாக (நிறுவனம் இழப்பீடு கோரலை ஒப்புக் கொண்ட பிறகு) முதல் தவணையாக ரெகுலர் மாத வருமானமாக ₹10,500/- (=5000*2.1) பெறுகிறார் மற்றும் மீதமுள்ள 119 RMI தவணைகள் பேஅவுட் காலமான 10 வருடங்களில், பின்னர் வரும் ஒவ்வொரு மாத மரண வருடாந்திரத்தில் வழங்கப்படும். மரண அனுகூலமான கடைசி தவணையுடன் உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை வழங்கப்பட்டவுடன் பாலிசி முடிவு பெறும்.

**மாதிரி-2:** அவர் பிரீமியம் செலுத்தும் காலமான 10 வருடங்களையும் ஒத்தி வைப்புக் காலமான 5 வருடங்களையும் தேர்வு செய்துள்ளார். அவரது பாலிசி காலம் 15 வருடங்கள் (PPT 10 வருடங்கள் மற்றும் ஒத்தி வைப்புக் காலம் 5 வருடங்கள்). ஒரு வேளை அவர் 11வது பாலிசி வருடத்தில் மரணமுற நேர்ந்தால் மற்றும் மரண நாள் வரை அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருந்தால், அவரது உரிமை கோருபவர் (கிளெய்மென்ட்) உடனடியாக (நிறுவனம் இழப்பீடு கோரலை ஒப்புக் கொண்ட பிறகு) முதல் தவணையாக ரெகுலர் மாத வருமானமாக ₹11,500/- (=5000*2.3) பெறுகிறார் மற்றும் மீதமுள்ள 119 தவணைகள் பேஅவுட் காலமான 10 வருடங்களில், பின்னர் வரும் ஒவ்வொரு மாத மரண வருடாந்திரத்தில் வழங்கப்படும். மரண அனுகூலமான கடைசி தவணையுடன் உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை வழங்கப்பட்டவுடன் பாலிசி முடிவு பெறும்.

**'வருட' பிரீமியம் செலுத்தும் வீதத்தின் மரண அனுகூலத்திற்கான உதாரணம்.**

35 வயதுடைய ஒரு ஆண், அவிவா இன்கம் சுரக்ஷா திட்டத்தை வாங்கியுள்ளார். அவர் வருட பிரீமியமாக ₹60,000 த்தை தேர்வு செய்துள்ளார்.

**மாதிரி-1:** அவர் பிரீமியம் செலுத்தும் காலமாக 10 வருடங்களையும் ஒத்தி வைப்புக் காலமாக 3 வருடங்களையும் தேர்வு செய்துள்ளார். அவரது பாலிசி காலம் 13 வருடங்கள் ஆகும் (PPT 10 வருடங்கள் மற்றும் ஒத்தி வைப்புக் காலம் 3 வருடங்கள்). ஒரு வேளை அவர்

6வது பாலிசி வருடத்தில் மரணமுற நேர்ந்தால் மற்றும் மரண நாள் வரை அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருந்தால், அவரது உரிமை கோருபவர் (கிளெய்மென்ட்) உடனடியாக (நிறுவனம் இழப்பீடு கோரலை ஒப்புக் கொண்ட பிறகு) முதல் RMI ₹12,000/- {(60000÷12)*2.40} பெறுகிறார் மற்றும் மீதமுள்ள 119 RMI தவணைகள் பேஅவுட் காலமான 10 வருடங்களில், பின்னர் வரும் ஒவ்வொரு மாத மரண வருடாந்திரத்தில் வழங்கப்படும். மரண அனுகூலமான கடைசி தவணையுடன் உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை வழங்கப்பட்டவுடன் பாலிசி முடிவு பெறும்.

**மாதிரி-2:** அவர் பிரீமியம் செலுத்தும் காலமான 10 வருடங்களையும் ஒத்தி வைப்புக் காலமான 5 வருடங்களையும் தேர்வு செய்துள்ளார். அவரது பாலிசி காலம் 15 வருடங்கள் (PPT 10 வருடங்கள் மற்றும் ஒத்தி வைப்புக் காலம் 5 வருடங்கள்). ஒரு வேளை அவர் 11வது பாலிசி வருடத்தில் மரணமுற நேர்ந்தால் மற்றும் மரண நாள் வரை அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருந்தால், அவரது உரிமை கோருபவர் (கிளெய்மென்ட்) உடனடியாக (நிறுவனம் இழப்பீடு கோரலை ஒப்புக் கொண்ட பிறகு) முதல் தவணையாக RMI ₹13,000/- {(60000÷12)*2.60} பெறுகிறார் மற்றும் மீதமுள்ள 119 தவணைகள் பேஅவுட் காலமான 10 வருடங்களில், பின்னர் வரும் ஒவ்வொரு மாத மரண வருடாந்திரத்தில் வழங்கப்படும். மரண அனுகூலமான கடைசி தவணையுடன் உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை வழங்கப்பட்டவுடன் பாலிசி முடிவு பெறும்.

**காலாவதி / புதுப்பித்தல் / சரண்டர் ஆகியவற்றின் ஷரத்துக்கள்**

**ஒரு வேளை கடைசி இரண்டு வருட பிரீமியங்கள் செலுத்தாமல் இருந்தால்:**

- முதல் 2 பாலிசி வருடங்களில், ஒரு வேளை உரிய பிரீமியத்தை கருணைக் காலம் முடியும் முன் செலுத்தாமல் இருந்தால், பாலிசி காலாவதி ஆகிறது.
- செலுத்தாத முதல் உரிய பிரீமிய நாள் முதல் ஒரு வேளை காலாவதியான ஒரு பாலிசியை, ஐந்து வருடங்களுக்குள் (புதுப்பித்தல் காலம்) புதுப்பித்துக் கொள்ளாவிட்டால், பிரீமியங்களின் (வரிகள் மற்றும் கூடுதல் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக) 50%ஐ வழங்கி பாலிசி முடிவு பெறும்.
- ஒரு காலாவதியான பாலிசியின் கீழ், புதுப்பித்தல் காலத்திற்குள் ஒரு வேளை மரணம் நிகழ்ந்தால், மரண நாள் வரை செலுத்திய மொத்த பிரீமயத்தின் 100% திரும்ப வழங்கப்படும் மற்றும் பாலிசி முடிவு பெறும்.
- வேறு எந்தவிதமான நன்மைகளும் வழங்கப்பட மாட்டாது

செலுத்திய மொத்த பிரீமியங்கள் என்றால், பெறப்பட்ட அனைத்து மொத்த பிரீமியங்களில், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக.

**ஒரு வேளை குறைந்தபட்சம் இரண்டு வருட பிரீமியங்கள் செலுத்தி இருந்தால்:**

குறைந்தபட்சம் முதல் 2 வருடங்கள் பிரீமியம் செலுத்திய பிறகு, ஒரு வேளை கருணைக் காலம் முடிவடைவதற்கு முன் ஏதாவது உரிய பிரீமியம் செலுத்தாமல் இருந்தால், பாலிசியானது கீழ்க்கண்ட நன்மைகளுடன் பெய்ட் அப்பாக மாற்றப்படும்.

செலுத்திய மொத்த பிரீமியங்கள்
பெய்ட் அப் மரண ரொக்க உத்திரவாதம் =……..…..x மரண ரொக்க உத்திரவாதம்
செலுத்த வேண்டிய மொத்த பிரீமியங்களின் எண்ணிக்கை

செலுத்திய மொத்த பிரீமியங்கள்
பெய்ட் அப் முதிர்வு ரொக்க உத்திரவாதம் =….........x முதிர்வு ரொக்க உத்திரவாதம்
செலுத்த வேண்டிய மொத்த பிரீமியங்களின் எண்ணிக்கை

குறைக்கப்பட்ட பெய்ட் அப் நன்மைகள் கீழ்க்கண்ட முறைகளில் வழங்கப்படுகிறது:

ஒரு பெய்ட் அப் பாலிசியின் கீழ் பாலிசி காலத்தின் பொழுது ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் மரணமுற நேர்ந்தால் அல்லது பாலிசி காலம் இறுதி வரை உயிர் வாழும் பொழுது, பே அவுட் காலத்தில் விகிதாச்சாரப்படி குறைக்கப்பட்ட ரெகுலர் மாத வருமானம் வழங்கப்படுகிறது.

- ஒரு பெய்ட் அப் பாலிசியின் கீழ் மரணம் / முதிர்வின் பொழுது குறைக்கப்பட்ட ரெகுலர் மாத வருமானம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

செலுத்திய பிரீமியங்களின் மொத்த எண்ணிக்கை
அசல் மரண அல்லது முதிர்வு நன்மை மடிப்பிளையர் x………………………………x மாத பிரீமியம்
$செலுத்த வேண்டிய பிரீமியங்களின் மொத்த எண்ணிக்கை

வருட பிரீமிய வீதத்திற்காக, மாத பிரீமியம்
= வருடாந்திரப் பிரீமியம் ÷ 12

''வருட பிரீமியம்'' என்பது பாலிசிதாரர் தேர்வு செய்தபடி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையாகும், இதில் வரிகள், ரைடர் பிரீமியங்கள், எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள் மற்றும் மோடல் பிரீமியங்களின் லோடிங்குகள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக.

கூடுதலாக, கடைசி தவணையுடன் விகிதாச்சார வயது சார்ந்த உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மையும் வழங்கப்படுகிறது

**புதுப்பித்தல்:**

செலுத்தாத முதல் உரிய பிரீமிய (FUP) நாள் முதல் பாலசிதாரருக்கு ஒரு காலாவதியான / பெய்ட் அப் பாலிசியை புதுப்பித்துக் கொள்ள ஐந்து வருடங்கள் உள்ளது. நிறுவனத்தின் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட நடப்பில் இருக்கும், எழுத்துக் காப்புறுதி (அன்டர்ரைட்டிங்) பாலிசியின் படி, தொடர்ச்சியாக காப்பீடு செய்து கொள்ள முடியும் என்பதற்கான ஆதாரத்தை நிறுவனத்தின் திருப்திக்கு ஏற்ப பாலிசிதாரர் சமர்ப்பிப்பதற்கு உட்பட்டும் புதுப்பித்தல் ரொக்கத்தின் அடிப்படையிலும் மற்றும் செலுத்தாத அனைத்து உரிய பிரீமியங்களை, புதுப்பித்தல் கட்டணம் மற்றும் காலதாமதமான காலத்திற்கு செலுத்தாத உரிய பிரீமியங்களின் மீதான வட்டித் தொகையை செலுத்துவதற்கு உட்பட்டும் அமையும். புதுப்பித்தல் கட்டணமானது ₹250 மற்றும் வரிகள், ஏதாவது இருப்பின் மற்றும் வட்டி விலை ஆண்டிற்கு 9% மாத கூட்டு வட்டியாக மற்றும் வரிகள் ஏதாவது இருந்தால் அவையும் ஆகும். ஒரு பெய்ட் அப் பாலிசியை பாலிசி காலம் முடிவடைந்து விட்டால் மீண்டும் புதுப்பித்துக் கொள்ள முடியாது.

**சரண்டர் மதிப்பு (SV)**

குறைந்தது இரண்டு வருடங்கள் பிரீமியங்கள் செலுத்தி இருந்தால் ஒரு பாலசியை எந்நேரத்திலும் சரண்டர் செய்ய முடியும். வழங்கப்படும் சரண்டர் மதிப்பானது, உத்திரவாத சரண்டர் மதிப்பு மற்றும் சிறப்பு சரண்டர் மதிப்பு ஆகியவற்றின் அதிகமானது.

**உத்திரவாத சரன்டர் மதிப்பு:**

உத்திரவாத சரன்டர் மதிப்பானது கீழ்க்கண்ட அட்டவணையில் அளித்துள்ளபடி ஆகும்.

| சரண்டர் செய்யப்படும் பாலிசி வருடம் | உத்திரவாத சரன்டர் மதிப்பானது, செலுத்திய மொத்த பிரீமியங்களின்* ஒரு விழுக்காடாக. | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பிரீமிய காலம் = 10 வருடங்கள் | | | பிரீமிய காலம் = 12 வருடங்கள் | | |
| | ஒத்திவைப்புக் காலம் | | | ஒத்திவைப்புக் காலம் | | |
| | 0 | 3 | 5 | 0 | 3 | 5 |
| 1 | - | - | - | - | - | - |
| 2 | 50% | 50% | 50% | 50% | 50% | 50% |
| 3 | 50% | 50% | 50% | 50% | 50% | 50% |
| 4 | 50% | 50% | 50% | 50% | 50% | 50% |
| 5 | 50% | 50% | 50% | 50% | 50% | 50% |
| 6 | 50% | 50% | 50% | 50% | 50% | 50% |
| 7 | 50% | 50% | 50% | 50% | 50% | 50% |
| 8 | 65% | 55% | 55% | 60% | 50% | 50% |
| 9 | 90% | 60% | 60% | 70% | 50% | 50% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | 90% | 68% | 65% | 80% | 55% | 55% |
| 11 | | 78% | 70% | 90% | 65% | 60% |
| 12 | | 90% | 75% | 95% | 75% | 68% |
| 13 | | 90% | 80% | | 80% | 70% |
| 14 | | | 90% | | 90% | 75% |
| 15 | | | 90% | | 90% | 80% |
| 16 | | | | | | 90% |
| 17 | | | | | | 90% |

செலுத்திய மொத்த பிரீமியங்கள் என்றால், பெறப்பட்ட அனைத்து மொத்த பிரீமியங்களில், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக.

**சிறப்பு சரண்டர் மதிப்பு:**
சிறப்பு சரண்டர் மதிப்பானது பின் வருவனவற்றிற்கு நிகரானது:

சிறப்பு சரண்டர் மதிப்புக் காரணி x பெய்ட் அப் மதிப்பு

பெய்ட் அப் மதிப்பு = பெய்ட் அப் முதிர்வு ரொக்க உத்திரவாதம் + விகிதாச்சார (N/T) வயது சார்ந்த உத்திரவாத டெர்மினல் (இறுதி) நன்மை

இதில் N என்றால், செலுத்திய பிரீமியங்களின் எண்ணிக்கை மற்றும் T என்றால் பாலிசியின் கீழ் செலுத்த வேண்டிய மொத்த பிரீமியங்களின் எண்ணிக்கை

சிறப்பு சரண்டர் மதிப்புக் காரணிகளை (SSV) IRDA ஆஃப் இந்தியாவின் முன் அனுமதி பெற்று நிறுவனம் அவ்வப்பொழுது மறு பரிசீலனை செய்யும்

**முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

**வரி நன்மைகள்**
வரி நன்மைகள், வருமான வரிச் சட்டம் 1961, பிரிவு 80C மற்றும் 10(10(D)) இன்படி ஆகும். வரி நன்மைகள் நடப்பில் இருக்கும் வரிச் சட்டங்களின்படி அமையும் மற்றும் அவை அவ்வப்பொழுது மாற்றத்திற்கு உட்பட்டது.

**கருணைக் காலம் (கிரேஸ் பிரீயட்)**
''கருணைக் காலம் என்றால்'' பிரீமியத்தை செலுத்துவதற்கு உரிய நாளில் இருந்து கூடுதல் காலத்திற்குள், எந்தவித அபராதம் அல்லது தாமதக் கட்டணம் ஆகியவை இன்றி செலுத்துவதற்கு நாங்கள் அளிக்கும் காலம் ஆகும், இந்த காலத்தில், எந்தவித தடங்கலும் இன்றி, பாலிசியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காப்பீடு பாதுகாப்புடன் பாலிசி நடைமுறையில் உள்ளது போல் கருதப்படும். இந்தக் கருணைக் காலமானது, ஆண்டு பிரீமியம் செலுத்தும் வீதத்திற்கு 30 நாட்களும் மற்றும் மாத பிரீமியம் செலுத்துவதற்கு 15 நாட்களும் ஆகும்.

**நாமினேஷன் மற்றும் அசைன்மென்ட்**
காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 39 இல் வரையறுத்துள்ளபடி மற்றும் அவ்வப்பொழுது மாற்றப்படுவதற்கு உட்பட்டும் நாமினேஷனானது பாலிசியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.
காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 38 இல் வரையறுத்துள்ளபடி மற்றும் அவ்வப்பொழுது மாற்றப்படுவதற்கு உட்பட்டும் அசைன்மென்ட்டானது பாலிசியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

**கடன்**
இந்தப் பாலிசிக்கு எதிராக அவிவா எந்தவித கடன்களும் வழங்குவதில்லை

**இலவச பார்வைக் காலம் (ஃப்ரீ லுக் பீரியட்):**
பாலிசி ஆவணம் கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து (15) நாட்களுக்குள் (ஒரு வேளை மின்னணு பாலிசிகள் மற்றும் பாலிசி தொலைதூர விற்பனை மூலம் கோரப்பட்டிருந்தால் முப்பது (30) நாட்கள்) விதிகள் மற்றும் நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்யும் உரிமை உங்களுக்கு உள்ளது. ஒரு வேளை நீங்கள் ஏதாவது விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளவில்லை என்றால், நிறுவனத்திற்கு உங்கள் ஆட்சேபனைக்கான காரணங்களை தெரிவித்து, பாலிசி ஆவணங்களை திரும்ப அனுப்பலாம்.

ஒரு வேளை நீங்க் பாலிசியை இலவச பார்வை காலத்திற்குள் ரத்து செய்ய திரும்ப அனுப்பினால், நாங்கள் பிரீமியத் தொகையை (வட்டி எதுவும் இல்லாமல்), நாங்கள் செலவு செய்த மருத்துவப் பரிசோதனைக்கான செலவு (ஏதாவது இருந்தால்), காப்பீட்டு காலத்திற்கான விகிதாச்சார பிரீமியம் மற்றும் முத்திரைத்தாள் செலவுகள் ஆகியவற்றைக் கழித்துக் கொண்டு திரும்ப வழங்குவோம்.

**தற்கொலைக்கான இழப்பீடு கோரல்கள் மற்றும் நீக்குதல்கள் (ஏதாவது இருந்தால்)**
பாலிசியின் கீழ் காப்பீடு துவங்கிய அல்லது புதுப்பித்தல் நாள் முதல் 12 மாதங்களுக்குள் ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளரின் மரணமானது தற்கொலை மூலமாக இருந்தால் மற்றும் பாலசி நடப்பில் இருப்பதற்கு உட்பட்டு, நாமினி அல்லது பாலிசிதாரரரின் பயனாளர். மரண நாள் வரை செலுத்திய மொத்த பிரீமியங்களின் குறைந்தபட்சாம் 80%ஐ அல்லது மரண நாளில் உள்ள சரண்டர் மதிப்பு, இதில் அதிகமானதை பெற தகுதி பெறுகிறார்.

**ரைடர்கள்**
இந்தத் திட்டத்தின் கீழ் ரைடர்கள் எதுவும் இல்லை

**ஒப்புதல்**
காப்பீடு ஒப்புதல் மற்றும் முழுமையான பிரீமியம் கிடைக்கப் பெறும் வரை அவிவா, எந்த இழப்பீடு கோரல்களுக்கும் பொறுப்பாளி ஆகாது.

**காப்பீட்டுச் சட்டம், 1938, பிரிவு 41**
காப்பீட்டுச் சட்டம், 1938, பிரிவு 41 இன் ஷரத்துக்களின்படி, மற்றும் அவ்வப்பொழுது திருத்துவதற்கு உட்பட்டு பிரயோகிக்கப்படுகிறது. தற்பொழுதைய ஷரத்துக்களின்படி:

(1) காப்பீட்டாளரின் அட்டவணை அல்லது வெளியிடப்பட்ட விற்பனை அறிக்கையில் அனுமதியளிக்கப்பட்ட தள்ளுபடியைத் தவிர எந்த ஒரு நபரும், நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு நபரையும் எந்தவித ஆயுள் அல்லது இந்திய நாட்டில் உள்ள சொத்துக்களை காப்பீடு செய்து கொள்ள, தொடர, புதுப்பிக்க அல்லது புதிதாக எடுக்க, முழுமையாக அல்லது பகுதி கமிஷனை அல்லது பாலிசியில் கூறப்பட்டுள்ள பிரீமியத்தில் தள்ளுபடி செய்து தூண்டக் கூடாது அல்லது எந்த ஒரு நபரும் ஒரு பாலிசியை எடுத்துக் கொள்ள அல்லது ரெனிவல் செய்ய, அல்லது தொடர்வதற்கு எந்தவித தள்ளுபடியையும் பெறக் கூடாது.
(2) இந்த ஷரத்துக்களின் விதிமுறைகளைப் பின்பற்றுவதில் எந்த ஒரு நபராவது தவறினால், அவருக்கு அபராதம் 10 இலட்சம் வரை நீட்டிக்கப்படும்.

**காப்பீட்டுச் சட்டம், 1938, பிரிவு 45**
காப்பீட்டுச் சட்டம், 1938, பிரிவு 41 இன் ஷரத்துக்களின்படி, மற்றும் அவ்வப்பொழுது திருத்துவதற்கு உட்பட்டு ஒப்பந்தத்தில், பிரயோகிக்கப்படுகிறது.

**அவிவா பற்றி**
அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் என்பது டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட், ஒரு யூகேவை அடிப்படையாகக் கொண்ட ஒரு குழு, அதனுடனான இந்திய உறவு 1834 வரை பின்நோக்கிச் செல்லும், ஆகிய இரண்டின் கூட்டுறவு ஆகும். அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸை தேர்ந்தெடுத்தன் மூலம், நீங்கள் உலகின் பழமையான காப்பீட்டுக் குழு ஒன்றின், அதன் வரலாறு 1696 வரை பின்நோக்கிச் செல்லும், நிர்வாக அனுபவத்தைப் பெறுகிறீர்கள்.
1884 இல் தோற்றுவிக்கப்பட்ட டாபர் இந்தியா லிமிடெட், டாபர் நிறுவனத்தின் முதன்மை நிறுவனமானது, இந்தியாவின் பழமையான மற்றும் பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். இது பாரம்பரிய சுகாதாரப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

## கேள்விகள் மற்றும் புகார்கள்

மேலும் கூடுதல் விவரங்கள், கேள்விகள் அல்லது புகார்களுக்கு, தயவு செய்து கீழ்க்கண்ட எண்ணில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:

1800 103 7766 (BSNL/MTNL உபயோகிப்பாளர்களுக்கு இலவசம்)
அல்லது 0124-2709046 அல்லது SMS "Aviva" என்று 5676737
என்ற எண்ணிற்கு அனுப்பவும்
ஃபேக்ஸ் எண் : 0124-2709007

AVIVA | Life Insurance |

*டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.*

### அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

**தலைமை அலுவலகம்:** அவிவா டவர், செக்டார் ரோடு, கோல்ஃப் கோர்ஸ் எதிரில், DLF ஃபேஸ்-V, செக்டார் 43, குர்காவ்-122003, ஹரியானா, இந்தியா தொலைபேசி எண்: +91 124-2709000,
ஃபேக்ஸ் எண்: +91 124-2571210
இணையதளம்: www.avivaindia.com
மின் அஞ்சல்: customerservices@avivaindia.com

**பதிவு அலுவலகம்:** 2[வது] மாடி, பிரகாஷ்தீப் பில்டிங், 7, டால்ஸ்டாய் மார்க், புது தில்லி-110001, இந்தியா.

போலியான தொலைபேசி அழைப்பு மற்றும் கற்பனையான / மோசடியான சலுகைகளில் இருந்து ஜாக்கிரதை: IRDA ஆஃப் இந்தியா பொதுமக்களுக்கு தெளிவு படுத்துவது என்னவென்றால்: • IRDA ஆஃப் இந்தியா அல்லது அதன் அதிகாரிகள், எந்த விதமாக காப்பீடு அல்லது நிதித் திட்டங்கள் அல்லது இன்வெஸ்ட் பிரீமியங்கள் ஆகியவற்றின் விற்பனை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. • IRDA வ் இந்தியா எந்தவித போனஸ் அறிவிப்புகளையும் வெளியிடுவதில்லை. அப்படிப்பட்ட தொலைபேசியை பெறும் பொதுமக்கள், தொலைபேசி அழைப்பின் விவரங்கள் மற்றும் எண் ஆகியவற்றைக் கொண்டு காவல் துறையில் ஒரு புகாரைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அவிவா - இன்கம் சுரக்ஷா - ஒரு தனி நபர், இணைப்பு இல்லாத, பங்கு பெறாத சேமிப்புடன் கூடிய ஆயுள் காப்பீட்டுத் திட்டம். மேலே அளிக்கப்பட்டுள்ள வர்த்தகச் சின்னம் அவிவா பிராண்ட்ஸ் லிமிடெடுக்கு சொந்தமானது மற்றும் அது உரிமம் பெற்று அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டால் வழங்கப்படுகிறது. ஆபத்துக் காரணிகள், விதிகள் மற்றும் நிபந்தனைகளின் மேலும் விவரங்களுக்கு தயவு செய்து விற்பனை அறிக்கையை விற்பனையை முடிவு செய்யும் முன் கவனமாகப் படிக்கவும். வரி நன்மைகள் நடப்பில் இருக்கும் வரிச் சட்டங்களின்படி இருக்கும் மற்றும் அவை மாற்றத்திற்கு உட்பட்டது. IRDA ஆஃப் இந்தியாவின் பதிவு எண்: 122. பதிவு விலாச அலுவலகம்: 2வது மாடி, பிரகாஷ்தீப் பில்டிங், 7, டால்ஸ்டாய் மார்க், புது தில்லி - 110 001. நிறுவன அடையாள எண்(CIN): U66010DL2000PLC107880, மின் அஞ்சல்customerservices@ avivaindia.com, தொலைபேசி எண் : 0124 - 2571210, கூணிடூடூகட்டணமில்லா எண்.:1800-103-7766/ 1800-103-8000. இணையதளம் : www.avivaindia.com, UIN: 122N133V01, Advt. No. : Nov 41/19.